(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 106.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2016 ஒக்தோபர் 06, வியாழக்கிழமை, மு.ப. 10.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

142/ '15

1.

கௌரவ புத்திக பத்திறண,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2014 ஆம் நிதியாண்டில் நட்டமடைந்த அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாவை என்பதையும்;

(ii) அந்த நிறுவனங்கள் அடைந்த நட்டம் தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் பிற அரச நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய பணத்தொகை தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) நட்டத்தை ஈடுசெய்வதற்காக மேற்படி நிறுவனங்களுக்கு பொதுத் திறைசேரி மூலம் வழங்கப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு நிறுவன ரீதியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) மேற்படி நட்டத்துக்கான காரணங்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அக்காரணங்கள் ஒவ்வொரு நிறுவன ரீதியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) மேற்படி நிறுவனங்களை இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(v) ஆமெனில், அது எவ்வாறு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

604/'16

2.

கௌரவ லக்கி ஜயவர்தன,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 1980 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க ஒப்பனைச் சாதனங்கள், உபகரணங்கள் மற்றும் மருந்துகள் சட்டத்தின் கீழ் இலங்கைக்கு ஒப்பனைச் சாதனங்களை இறக்குமதி செய்யும் போது அதற்கு ஒப்பனைச் சாதனங்கள், உபகரணங்கள் மற்றும் மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) எனினும், 2015 இல் தாபிக்கப்பட்ட மருந்துகள் ஒழுங்குமுறையாக்கல் அதிகாரசபைச் சட்டத்தின் மூலம் ஒப்பனைச் சாதனங்கள் எனும் விடயம் நீக்கப்பட்டுள்ளதனால் உடலுக்கு கேடுவிளைவிக்கின்ற பாதகமான ஒப்பனைச் சாதனங்களை இறக்குமதி செய்வதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது என்பதையும்;

(ii) உடலுக்கு பாதகமான மேற்படி ஒப்பனைச் சாதனங்களை பயன்படுத்துவோர் பல்வேறு ஒவ்வாமைகளுக்கு ஆளாகி மரணமடைந்தும் மற்றும் நோய்வாய்ப்பட்டும் உள்ளார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) இவ்வாறான சம்பவங்களைக் குறைப்பதற்கும், ஒப்பனைச் சாதனங்களின் இறக்குமதியை ஒழுங்குமுறைப்படுத்துவதற்குமென முறைசார்ந்த முறையியல் ஒன்றை துரிதமாக தயாரிப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

618/ ‘16

3.

கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்,— புத்தசாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள கோக்கிலாய் பிரதேசத்தில், திரு திருஞானசம்பந்தர் மணிவண்ணதாசருக்குச் சொந்தமான காணியொன்றில் சட்டவிரோதமான முறையில் பௌத்த விகாரையொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றமையை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மக்கள் எதிர்ப்பு பலமாக எழுந்துள்ள சந்தர்ப்பத்தில் சட்டவிரோதமான முறையில் நிர்மாணிக்கப்படுகின்ற மேற்படி விகாரையின் நிர்மாணிப்புப் பணிகளை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

655/ ’16

4.

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 சனவரி மாதம் 10 ஆந் திகதி தொடக்கம் 2016 ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி வரையிலான காலகட்டத்துக்குள் தமது கடமைகளுக்காக அல்லது தனிப்பட்ட பயனாளிகளுக்காக விமானப் படைக்குரிய ஹெலிகொப்டர்கள் அல்லது விமானங்களைப் பயன்படுத்திய அரசியல்வாதிகள் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் வேறு நபர்கள் வெவ்வேறாக யாவர் என்பதையும்;

(ii) மேற்படி விமானப் பயணங்களுக்காக தலா ஒவ்வொரு நபரிடமிருந்து அறவிடப்பட்ட தொகை வெவ்வோறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி விமானப் பயணங்களுக்காக அறவிடப்பட வேண்டிய பணத்தில் இதுவரை செலுத்தப்படாதுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

672/ '16

5.

கௌரவ பிமல் ரத்னாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சனாதிபதி, பிரதம அமைச்சர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் சனாதிபதிகள் ஆகியோருக்கென ஒதுக்கப்பட்டுள்ள, கொழும்பு நகரில் அமைந்துள்ள மொத்த உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி உத்தியோகபூர்வ இல்லங்களை தற்போது உபயோகிப்பவர்களின் பெயர் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி உத்தியோகபூர்வ இல்லங்களை ஒதுக்குவதற்காக பின்பற்றப்படும் ஒழுங்குவிதிகள் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கை அல்லது ஆவணமொன்று உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனின், அதனை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) ஒழுங்குவிதிகள் அடங்கிய ஆவணமொன்று இல்லாவிடின், உத்தியோகபூர்வ இல்லங்கள் ஒதுக்கப்படும் நடைமுறை என்னவென்பதையும்;

(vi) உத்தியோகபூர்வ இல்லங்கள் ஒதுக்கப்படும் ஒழுங்குவிதிகள் அல்லது நடைமுறைக்கு அமைவாக தகைமைகளை பூர்த்தி செய்யாது இல்லங்களில் தங்கியிருப்பவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

707/ ' 16

6.

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ரஷ்யாவின், இலங்கைத் தூதுவராக திரு. உதயங்க வீரதுங்க கடமையாற்றிய காலஎல்லை யாது என்பதையும்;

(ii) இவருக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டுக்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகளின் முன்னேற்றம் யாது என்பதையும்;

(iv) இவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் தாமதமடைவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) இவரை கைதுசெய்வதற்கு சர்வதேச பொலிசின் உதவி கோரப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

718/ ’16

7.

கௌரவ இஷாக் ரஹுமான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அநுராதபுரம் மாவட்டத்தில்,

(i) அமைந்துள்ள ஒரேயொரு தமிழ் மொழிமூல தேசிய பாடசாலையான அ/ சாஹிரா வித்தியாலயம் கவனிப்பாரற்ற நிலைக்குள்ளாகியமையால் பல்வேறு குறைபாடுகள் நிலவுகின்றதென்பதையும்;

(ii) “1000 பாடசாலைகள்” வேலைத்திட்டத்தில் காடாண்டுகம, ஜாயா முஸ்லிம் மஹா வித்தியாலயம் மற்றும் கஹட்டகஸ்திகிலிய முஸ்லிம் மஹா வித்தியாலயம் உள்ளடக்கப்பட்டுள்ளபோதிலும் தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வுகூடம் தவிர்ந்த வேறு எவ்விதமான வசதிகளும் இன்றளவில் வழங்கப்படவில்லை என்பதையும்;

(iii) சிங்கள மற்றும் தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் தொழில்நுட்பவியல் போன்ற பாடங்களைப் போதிப்பதற்கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேலே அ (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலையில்,

(i) உயர்தர விஞ்ஞானப் பிரிவில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படுகின்ற;

(ii) புதிய கட்டடமொன்று வழங்கப்படுகின்ற;

(iii) அதிபருக்கான அலுவலகமும் கேட்போர் கூடமொன்றும் வழங்கப்படுகின்ற;

(iv) குடிநீர் சுத்திகரிப்பு கருவியொன்று வழங்கப்படுகின்ற;

திகதி யாதென்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேலே அ (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு அவசியமான ஏனைய வசதிகள் வழங்கப்படுகின்ற;

(ii) மேலே அ (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படுகின்ற;

திகதி யாதென்பதையும் தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

722/ ’16

8.

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த மே மாதத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளம் காரணமாக சேதத்துக்குள்ளான பயிர்ச் செய்கைகளுடன்கூடிய வயற்காணிகளின் பரப்பளவு எத்தனை ஹெக்டயார்கள் என்பதையும்;

(ii) மேற்படி சேதத்தினால் ஏற்பட்டுள்ள நஷ்டம் அண்ணளவாக எவ்வளவென்பதையும்;

(iii) சிறு குளங்கள் உட்பட சேதமடைந்துள்ள நீர்ப்பாசனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ள நீர்ப்பாசன கருத்திட்டங்கள் அமைந்துள்ள மாவட்டங்கள் தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) எதிர்காலத்தில் நாட்டின் உணவுப் பாதுகாப்பில் மேற்படி வெள்ளப் பாதிப்பு தாக்கங்களை ஏற்படுத்துமா என்பதையும்;

(ii) பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எவ்வாறு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

727/ '16

9.

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உள்நாட்டில் பகுதிகளை சேர்த்திணைத்து அமைக்கப்பட்ட ஆயினும், பதிவுசெய்யப்படாத வாகனங்களை பதிவு செய்வதற்கான விசேட அனுமதி 2016 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தின் மூலமாக வழங்கப்பட்டதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ii) 2016 மார்ச்சு மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட வர்த்தக வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவ்வாகனங்களை பதிவுசெய்துள்ள ஆட்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) ரூபா ஒரு மில்லியன் செலுத்தி பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் இவ்வாகனங்களை பதிவு செய்துள்ளவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

731/ '16

10.

கௌரவ ரோஹித்த அபேகுணவர்தன,— துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015.01.09 ஆம் திகதியளவில்,

(i) இலங்கை துறைமுக அதிகாரசபையின் மொத்த ஊழியர் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) ஒவ்வொரு துறைமுகத்திற்கும் அமைய நிரந்தர ஊழியர் எண்ணிக்கை, தனித்தனியே யாது என்பதையும்;

(iii) ஒவ்வொரு துறைமுகத்திற்கும் அமைய அமய அடிப்படையிலான ஊழியர் எண்ணிக்கை, தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2016.05.10 ஆம் திகதியளவில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் மொத்த ஊழியர் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2016.05.10 ஆம் திகதியளவில் அதிகாரசபைக்குப் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்படட ஊழியர் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட முறை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

850/ ' 16

11.

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— சகமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முதியோர்களுக்கான தேசிய பேரவை மற்றும் தேசிய முதியோர் செயலகம் ஆகியவற்றின் மூலம் சிரேஷ்ட பிரசைகளுக்குச் செலுத்தப்படுகின்ற ரூபா 2000/- கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அனைத்து சிரேஷ்ட பிரசைகளுக்கும் மேற்படி கொடுப்பனவு வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(iii) இதற்காக அரசாங்கத்தினால், 2016 ஆம் ஆண்டின் பொருட்டு ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கொடுப்பனவைச் செலுத்தும் எதிர்பார்ப்போடு, 2015 ஆம் ஆண்டில் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட பிரசைகளுக்கு இக்கொடுப்பனவு கிடைக்கும் திகதி யாதென்பதையும்;

(v) 2017 ஆம் ஆண்டிலேனும் இக்கொடுப்பனவைப் பெறுகின்றவர்களது எண்ணிக்கையை அதிகரிக்கச்செய்ய முடியுமா என்பதையும்;

(vi) தற்போது சிரேஷ்ட பிரசைகளுக்கு செலுத்தப்படுகின்ற இக்கொடுப்பனவில் 2016 சனவரி மாதம் தொடக்கம் அறவிடப்பட்ட ரூபா 100/- தொகை எப்போதாவது இவர்களுக்கு மீளளிப்புச் செய்யப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

851/ '16

12.

கௌரவ ரோஹினி குமாரி விஜேரத்ன,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மேல் மாகாண பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவினால் 2014.01.01 ஆம் திகதி தொடக்கம் 2016.06.30 ஆம் திகதி வரையிலான காலத்தினுள் நடாத்தப்பட்ட அனைத்து பரீட்சைகளுக்கும் ஏற்புடையதாக,

(i) ஒவ்வொரு பரீட்சையினதும் பெயர்;

(ii) ஒவ்வொரு பரீட்சைக்கும் ஏற்புடைய வினாத்தாள்களின் பெயர்கள்;

(iii) ஒவ்வொரு வினாத்தாளுக்கும் தோற்றிய பரிட்சார்த்திகளின் எண்ணிக்கை;

(iv) ஒவ்வொரு வினாத்தாளையும் தயாரித்தவர்களின் பெயர் மற்றும் பதவிப் பெயர்கள்;

(v) வினாத்தாள்களை தயாரிப்பதற்காக ஒவ்வொருவருக்கும் செலுத்தப்பட்ட பணத்தொகை;

(vi) விடைத்தாள்களை மதிப்பீடு செய்தவர்களின் பெயர் மற்றும் பதவிப் பெயர்கள்;

(vii) விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்காக ஒவ்வொருவருக்கும் செலுத்தப்பட்ட பணத்தொகை;

யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

865/ ’16

13.

கௌரவ சமிந்த விஜேசிறி,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது பதுளை மாவட்டத்தினுள் இயங்குகின்ற இ.போ.ச. டிப்போக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு டிப்போவின் மூலமும் ஒரு நாளில் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படுகின்ற பஸ்வண்டிகளின் எண்ணிக்கை, தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி டிப்போக்களில் தற்போது இலாபம் மற்றும் நட்டம் பெறுகின்ற டிப்போக்கள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iv) பதுளை மாவட்டத்தின் இ.போ.ச. டிப்போக்களில் கடமையாற்றுகின்ற மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) பதுளை மாவட்டத்தின் இ.போ.ச. டிப்போக்களில் தற்போது நிலவுகின்ற சாரதி, நடத்துனர், தொழில்நுட்பவியலாளர் பற்றாக்குறை மற்றும் பஸ்வண்டி உதிரிப்பாகங்கள் இல்லாமை போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

876/ '16

14.

கௌரவ விதுர விக்கிரமநாயக்க,— அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை முதலீட்டுச் சபையின், ஹொரணை தயாரிப்பு வலயம் அமைந்துள்ள பிரதேசத்தில், அருணகம கிராமத்துக்குச் செல்வதற்கு பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலிருந்து காணப்பட்ட வீதியில், வாயில்கள் நிர்மாணிக்கப்பட்டு பூட்டுப் போடப்பட்டு, பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நிறுத்தப்பட்டுள்ளார்கள் என்பதையும்;

(ii) இப்பிரதேசத்துக்கான முன்னைய வரைபடத்தில் மேற்குறிப்பிட்ட வீதி குறிக்கப்பட்டிருந்த போதிலும், முதலீட்டுச் சபையினால் புதிதாகத் தயாரிக்கப்பட்ட வரைபடத்தில் இந்த வீதி குறிக்கப்படவில்லை என்பதையும்;

(iii) மேற்படி பிரதேசத்தில் கோல்ப் விளையாட்டு மைதானமொன்றை நிர்மாணிப்பதற்காக, வீதிக்கு உரித்தான பகுதியையும் அரசாங்கம் விற்பனை செய்துள்ளதென்பதையும்;

(iv) கைத்தொழிலுக்கென ஒதுக்கப்பட்ட பிரதேசத்தில் கோல்ப் விளையாட்டு மைதானமொன்றை அமைப்பதன் மூலம், பிரதேசத்தின் இளைஞர் யுவதிகள் வேலைவாய்ப்புக்களை இழந்துள்ளார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) வீதி அமைந்துள்ள ஒரு காணியை விற்பதற்கான இயலுமை காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) மேற்படி வீதியை மூடிவிடுவதன் மூலம், மக்கள் இலகுவில் பிரதான வீதிக்கு பிரவேசிக்கக்கூடிய ஒரு வீதியை இழக்கச் செய்தல் முறையானதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

884/ '16

15.

கௌரவ அநுர திசாநாயக்க,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) க.பொ.த. (உயர்தர) வணிகப் பாடப் பிரிவில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுவதற்கு தகைமைபெறுகின்ற மாணவர்களுக்காக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் தற்போது பேணிவரப்படுகின்ற பட்டப் பாடநெறிகள் யாவை என்பதையும்;

(ii) 2014/2015 மற்றும் 2015/2016 கல்வி ஆண்டுகளில் மேற்படி பாடநெறிக்கு அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை, பாடநெறிகளுக்கு அமைய தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேலே (அ) (ii) இல் அனுமதிக்கப்பட்ட மாணவர்களில் கொழும்பு மாவட்டத்திலிருந்து அனுமதிக்கப்பட்ட,

(i) மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) ஆகக் குறைந்த தகைமையைக் கொண்ட மாணவரின் “Z” பெறுமதி மற்றும் மாவட்ட திறமை (பாடநெறி மற்றும் கல்வி ஆண்டுக்கு அமைய) யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கல்வி நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு துறைகளில் திறமைகளைக் காண்பித்த மாணவர்களை “விசேட திறமை” வகுதியின் கீழ், பல்கலைக்கழக பட்டப் பாடநெறிகளுக்கு அனுமதிக்கும் முறையியல் யாது என்பதையும்;

(ii) மேலே (அ) (i)இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பாடநெறிக்கும் “விசேட திறமை” இன் கீழ், உரிய கல்வி ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரும் காணி அமைச்சரும்,— காணி கொள்ளுதல் சட்டத்தின் கீழ் கட்டளை,— (460 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளுதல் சட்டத்தின் 63 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஊ) ஆம் அத்தியாயத்தின் 2013 காணி கொள்ளல் சட்டத்தின் (நட்டஈடு செலுத்துதல்) ஒழுங்குவிதிகளின் திருத்தம் தொடர்பில் காணி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 யூலை 26 ஆம் திகதிய 1977/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

இலங்கைப் பொறியியற் பேரவை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

மருத்துவம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி ( திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

ஒதுக்கீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்,— இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 36 ஆம் பிரிவு (2) ஆம் உப பிரிவின் (ஈ) மற்றும் (உ) பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 யூன் மாதம் 15 ஆம் திகதிய 1971/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.20ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) ஆம் உப பிரிவின் (ஔ), (க) மற்றும் ( த) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 செப்டெம்பர் 01 ஆம் திகதிய 1878/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 11.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 14அ, 14ஆ, 14இ, 14ஈ, 14உ, 14ஊ, 14எ, 14ஏ, 14ஐ, 14ஒ, 14ஓ 14ஔ, 14க மற்றும் 14ங பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 (1) (ந) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 செப்டெம்பர் 01 ஆம் திகதிய 1878/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 12.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 14அ, 14ஆ, 14இ, 14ஈ, 14உ, 14ஊ, 14எ, 14ஏ, 14ஐ, 14ஒ, 14ஓ 14ஔ, 14க மற்றும் 14ங பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 (1) (ந) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 திசெம்பர் 12 ஆம் திகதிய 1892/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 13.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (ஏ) பிரிவின் கீழ் உள்நாட்டலுவல்கள், கடற்றொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 மார்ச் 03 ஆம் திகதிய 1904/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 14.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 5) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (த எ), (த ஏ) மற்றும் (ந) பிரிவுகளின் கீழ் கடற்றொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 மார்ச் 26 ஆம் திகதிய 1907/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 15.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 6) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (ஔ) மற்றும் (ந) பிரிவுகளின் கீழ் கடற்றொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 மார்ச் 26 ஆம் திகதிய 1907/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 16.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 7) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 30 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 யூலை 20 ஆம் திகதிய 1924/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 17.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 8) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 29 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 ஒக்தோபர் 26 ஆம் திகதிய 1938/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 18.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 9) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (ந) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 ஒக்தோபர் 26 ஆம் திகதிய 1938/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 19.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 10) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 14அ, 14ஆ, 14இ, 14ஈ, 14உ, 14ஊ, 14எ, 14ஏ, 14ஐ, 14ஒ, 14ஓ 14ஔ, 14க மற்றும் 14ங பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 (1) (ந) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 திசெம்பர் 14 ஆம் திகதிய 1945/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 20.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் (இல. 11 ) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (ந) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 திசெம்பர் 14 ஆம் திகதிய 1945/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 21.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— “இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 22.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

23.

இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

24.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

25.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.